ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர்
நலத் (பமே2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொ(அ): 044-25671848
நிகரி : 044-25672446
e.mail : adisec@tn.gov.in

நேர்முகக் கடிதம் எண். 8169/பமே2/2012–1, நாள்:1.06.2012

அன்பார்ந்த அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பணி நியமனங்களில் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சரியான பங்கேற்பு – கண்காணிக்கவும் உறுதி செய்யும் துறைகளில் பற்றாளர்கள் தெரிவுசெய்தல் – எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரம் கோருதல்.

பார்வை: அரசாணை (நிலை) எண்.65 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே2) துறை நாள் 9.4.1997.

----

பார்வையில் காணும் அரசாணையின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது

2. பார்வையில் காணும் அரசாணையின்படி அரசு துறைகளிலும் அதனை சார்ந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகள் ஆகிய அலுவலக பணியாளர்களின் SC/ST நல சங்கங்களிலிருந்து மேற்படி அரசாணையின்படி சட்டபூர்வ சரியான அரசு விதிமுறைகளுக்குட்பட்டுள்ள இட ஒதுக்கீட்டிலும் பதவி உயர்வு மற்றும் பணியமைப்பிலும் சரியாக நடைமுறைபடுத்தவில்லை என்ற கோரிக்கைகள் அரசுக்கு வந்தவண்ணம் உள்ளன.

3. எனவே, மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீட்டின் படி பணி நியமனங்களில் சுழற்சி முறையை நடைமுறைப்படுத்தவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பணிகளில் பங்கேற்பினையும் உறுதி செய்யும் பொருட்டு துறைகளில் பற்றாளர் (Nodal Officer) ஒருவரை நியமனம் செய்து கொள்ளவும், மேற்படி அரசு ஆணையின் படி பற்றாளர்கள் தங்கள் துறையிலேயே ஓர் குறை தீர்க்கும் பாசறை (Grievance Cell) ஆகவும் செயல்படவும் மேற்படி அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த குறை தீர்க்கும் பாசறைக்கு அத்துறையில் பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பணியாளர்கள் தங்கள் முறையீடுகளை தெரிவிக்கலாம் என்றும் ஆணை வெளியிட்டுள்ளது.

4. துறையின் பற்றாளர் தங்களது துறையில் இட ஒதுக்கீடு விதிகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனம் செய்யப்பட்டுள்ளதா என்றும், செய்பப்படுகின்றதா என்றும், நியமனங்களில் சுழற்சி முறை சரியானபடி பின்பற்றப்பட்டுள்ளதா என்றும், பின்பற்றப்படுகிறதா என்றும் பற்றாளர்கள் கண்காணிக்கவும் உறுதிபடுத்திக்கொள்ளவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இட ஒதுக்கீடு தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை 3 மாதத்திற்கு ஒரு முறை ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு பற்றாளர்கள் தெரிவிக்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் ஒவ்வொரு துறையின் பற்றாளர்களும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் இதற்கென ஓர் ஆய்வு கூட்டம் நடத்தி ஆய்வு அறிக்கையை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மேற்படி அரசாணையின்படி, தங்கள் துறையில் பற்றாளர்கள் நியமித்து ஆய்வுகூட்டம் நடத்தி இருப்பின் அதன் முன்னேற்ற அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறும் மேற்படி அரசாணைபடி இதுநாள்வரை பற்றாளர்கள் நியமிக்கப்படவில்லை என்றால் உடனடியாக பற்றாளர் ஒருவரை நியமனம் செய்து தங்களது துறையில் இடஒதுக்கீடு விதிகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனம் செய்யப்பட்டுள்ளதா என்றும், செய்யப்படுகின்றதா என்றும், நியமனங்களில் சுழற்சிமுறை சரியானபடி பின்பற்றப்பட்டுள்ளதா என்றும், பின்பற்றப்படுகிறதா என்றும் கண்காணித்து 3 மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு கூட்டம் நடத்தி அதன் முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

6. மேற்படி அரசாணையின்படி ஒவ்வொரு துறையிலும் இடஒதுக்கீடு குறித்தும் துறைச் செயலர் ஆய்வு செய்ய உள்ளதாலும், இது குறித்து தலைமை செயலர் அளவில் ஆய்வு கூட்டம் நடத்த இருப்பதாலும் இதில் தனிக்கவனம் செலுத்துமாறும் தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

7. இக்கடிதம் கிடைக்கப்பெற்றதற்கான ஒப்புதலை அளிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒம்/-)

பெறுநர்
அனைத்துறை அரசுச் செயலாளர்கள், சென்னை-9.
<u>நகல்:-</u>
அனைத்து செயலகத் துறைகள், சென்னை-9,
அனைத்துத் துறைத்தலைவர்கள்,
அனைத்து அரசுப் பொது நிறுவனங்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிரா்விட நல அலுவர்கள்.
மாநிலத்தலைவர்,
தமிழ்நாடு அரசு SC/ST அலுவலர் நலச்சங்கம்,
எழும்பூர், சென்னை-8.

/உண்மை நகல்/

5.6.2012

பிரிவு அலுவலர்

5.6.12